# செனேட்டர் எ.எம்.எ.அஸீஸ் - ஓர் உள்ளுணர்வுப் பகுப்பாய்வு

*சி.நாராயணசுவாமி*

*செனேட்டர்அஸீஸ் அவர்களை, 2021 ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி நிகழ்கின்ற அன்னாரின் 110ஆவது ஜனன தினத்தில் நினைவுகூரும் வேளையில், இம்முஸ்லீம் தூரதரிசன மாமனிதர் பற்றிய பல நினைவுகள் என சிந்தனைக்கு வருகின்றன. ஒரு பெரும் புத்திசாதுரியம் நிறைந்த வல்லுநனராகவும், திறமையான நிர்வாகியாகவும், புலமை ஆற்றல் மிகுந்தோனாகவும் சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்த அன்னார், நாட்டுக்கும் மக்களுக்கும் குறிப்பாக முஸ்லீம் சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள சேவைகள் சேமமாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. மனித வாழ்க்கையின் வளர்ச்சிப் பாதையில் சந்திக்கின்ற சவால்களை வெற்றிகொள்கின்ற ஊக்கமிகு உதாரணங்கள் அன்னாரின் வாழ்க்கையில் காணக்கிடைக்கின்றன. அன்னாரின் அரிய சாதனைகளை அடுத்து வருகின்ற பந்திகளில் தருகின்றேன். அதற்குமுன்,அவருடன் நான் அறிமுகமாகிய அழகான கதையையும், அவர் என்னுடைய கல்விப்பாதைக்கு ஆர்வத்துடன் அளித்த அனுசரணையையும் ஆதரவையும் விளக்க விழைகின்றேன்.*

*செனேட்டர் அஸீஸ் அவர்களுடனான என்னுடைய இணைப்பு, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத் தகுந்ததாகும். என்னுடைய பதினாறாவது அகவையின்போது அஸீஸ் அவர்களின் அறிமுகத்தை அடையப்பெற்றேன். என்னுடைய ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் கற்ற காலம் அது. செனேட்டர் அஸீஸ் அவர்களும் இவ்வறிவகத்தின் ஆதி சீடன் ஆவார். சைவ சித்தாந்த ஒளிபரப்பும் தீபச்சுடரான அகிலம் போற்றும் ஆறுமுகநாவலர் தோன்றிய, யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அஸீஸ் அவர்கள் அவதரித்தார்கள். அது போன்று நானும் அங்கேயே பிறந்தேன். அறிவாளிகள் அமர்ந்திருந்த செயலமர்வுகளில், ஆறுமுகநாவலரின் போதனைகள் பற்றி அஸீஸ் அவர்கள் ஆற்றிய பேருரைகள், மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் பழக்க வழக்கங்கள், பாரம்பரிய பண்பாடுகள், மற்றும் சம்பிரதாயங்கள் தொடர்பாக அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அறிவு நம்பமுடியாதவாறு வியப்பை நல்கின. உயர் பண்புடன் மாட்சிமை நிறைந்த பின்னணியைக் கொண்டிருந்த யாழ்ப்பாண முஸ்லீமான அஸீஸ் அவர்களுக்கு இப்புலமைகள் இயற்கையாகவே அமைந்திருந்தன.*

*செனேட்டர் அஸீஸ் அவர்கள், யாழ்ப்பாணத்தில் பிரபல இரண்டு இந்துக் கல்லூரிகளான வைத்திஸ்வர வித்தியாலயம் மற்றும் யாழ் இந்துக்கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்று, அக்கல்லூரிகளின் பொலிவுடன் பிரகாசித்தமானவராகத் திகழ்ந்தார். அவர் இக்கல்லூரிகள் பற்றிப் பெருமிதம் கொண்டிருந்ததுடன் அங்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியப் பெருந்தகைகளின் வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சிகள் காரணமாக தமிழ் மொழியிலும் இந்து சமயத்திலும் சிறந்து விளங்கினார். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தன்னுடைய கற்கைக் காலப்பகுதியை இவ்வாறு கணித்துள்ளார். ‘‘நான் வேறு கல்லூரியில் சேராமல் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்குச் சென்ற காரணத்தால் மும்முறை ஆசீர்வதிக்கப்பட்டேன் என இப்போது உணர்கிறேன். அங்கே நான் கற்ற காலப்பகுதி 1921 மாசி மாதம் தொடக்கம் 1923 ஆனி மாதம் வரையிலுமான காலப்பகுதி அளவில் குறைந்திருந்தபோதிலும் தரத்தில் நிறைந்திருந்தது. காலாகாலமாக உலகம் முழுவதிலும் வியாபித்து விளங்கும்,தொன்மையும் தூய்மையும் நிறைந்த இனிமைத் தமிழ் மொழியில் கண்ணியமும் கருத்தாழமும் நிறைந்த தெய்வபக்திப் பாடல்கள் எனக்கு அறிமுகமானது வித்தியாலயத்திலேயே’’.*

*அஸீஸ் அவர்கள், 1929ம் ஆண்டில் பல்கலைக்கழகக் கல்லூரிக்குஉள்வாங்கப்பட்டார். அங்கே, வரலாற்றுத் துறையில் நிதர்சனம் செய்து காண்பிப்பவராகத் திகழ்ந்ததுடன்,1933 இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்று, அரச புலமைப் பரிசில் வழங்கப்பட்டு கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திற்குப் பட்டப்பின் படிப்பைத் தொடரச் சென்ற அவர், இலங்கைச் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்த காரணத்தால், சிறிது காலம் கழித்து இலங்கைக்குத் திரும்பினார். அந்தக் காலத்தில் அதி உன்னதமாகவும் பெரிதும் மதித்தும் போற்றப்பட்ட சேவையில் இணைக்கப்பட்ட முதலாவது முஸ்லீம் அஸீஸ் அவர்களே.*

*என்னுடைய தாயார் 1948இல் இறையடி சேர்ந்தார். என்னுடைய தந்தையே எனக்குச் சகலதுமாக இருந்தார். என்னுடைய சிரேஸ்டதராதரப் பரீட்சை முடிவுகளைத் தொடர்ந்து, உயர்தரப் பரீட்சைக்கான*

(H.S.C) கல்வியைத் தொடர கல்லூரி விடுதியில் என்னை இணைக்க விரும்பினார். நான் அருமைத்தாயாரின் இழப்பால் வீட்டில் துயருற்று இருந்ததையும், இதற்கு மாற்றுவழியான நடவடிக்கையாகவுமே அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்தார். நான் மாத்திரம்அவருடைய ஒரே மகனாக இருந்ததால், என்னுடைய கல்வி தடைகளின்றித் தொடரவேண்டுமென்ற ஆர்வத்தைக் கொண்டிருந்தார். நான் கல்லூரி விடுதியில் இணைந்த சிறிது காலத்தின்பின், H.S.C. விடுதி மாணவர் மன்றத்தில் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். நான் 1943 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியில் கற்றுவந்த காரணத்தால் என்னை இந்த மன்றத்தின் செயலாளராகத் தெரிவு செய்தார்கள். 1952 ஆண்டில் இடம்பெற்ற விடுதி மாணவர் மன்ற வருடாந்த இராப் போஜன வைபவத்தில், பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்குமாறு, நான் அம்மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் அழைப்பனுப்பியிருந்தேன்.

யாழ் இந்துக் கல்லூாயின் பழைய மாணவர்களை விடுதி மன்றத்தின் வருடாந்த இராப்போஜன வைபவத்திற்கு அழைப்பது வழக்கமாக இருந்தது. இந்த விருந்துபசாரத்திற்கான அழைப்பிதழின் பிரதி ஒன்றை என்னுடைய பிரத்தியேக கோவையொன்றில் என்னுடைய கல்வி மற்றும் தொழில் சார்ந்த ஆவணங்களுடன் சேர்த்துப் பாதுகாப்பாக வைத்திருந்தேன். இந்த அழைப்பிதழ் பிரதி கிடைத்தமை எனக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தது. செனேட்டர் அஸீஸ் அவர்களுடனான என்னுடைய தொடர்புகள் பற்றி எழுதுமாறு அஸீஸ் அவர்களின் அன்பு மகன் அலி அஸீஸ் அவர்கள் கேட்டிருந்த வேளையில் அஸீஸ் அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள என்னுடைய ஆவணங்களைப் பரிசீலனை செய்தபோதே இந்த அழைப்பிதழ் பிரதி எனக்குக் கிடைத்தது.

செனேட்டர்ட அஸீஸ் எம்முடைய அழைப்பை ஏற்று வைபவத்திற்கு வருகை தந்தமை எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதுடன் எம் அனைவரையும் அவர் வெற்றியும் கொண்டார். நிகழ்ச்சிகள் நேர்த்தியாக நிறைவடைந்தபின்பு, பிரதம விருந்தினர் என்னைப் பிரத்தியேகமாக அழைத்து, கொழும்பில் எனக்கு உறவினர்கள் இருந்தால், என்னைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் இணைந்து கல்வியைத் தொடருமாறு தூண்டினார். அவருடைய இந்த யோசனையை, என்னுடைய தந்தை ஒரே மகனான என்னைப் பிரிந்திருக்க விரும்பாத காரணத்தால் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றேன். இது தொடர்பாக என்னுடைய தந்தையுடன் பேச விரும்புவதாகக் கூறியதால் என்னுடைய தந்தையைச் சந்தித்தார். உயர்தர இரண்டாம் வருடக் கற்கையைப் பூர்த்திசெய்து பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பு கிடைக்கும் என்று என்னுடைய தந்தையைத் திருப்திப்படுத்தியதால் தந்தையும் இணங்கினார். நானும் கொழும்பு ஸாஹிராவில் இணைந்தேன். உயர்தரப் பரீட்சையில் உன்னதச் சித்திபெற்று பேராதெனியப் பல்கலைக் கழகத்திற்கு நேரடியாக உள்வாங்கப்பட்டேன். அந்தக் காலகட்டத்தில் உயர்தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி பெற்றவர்கள் நேரடியாகவும், மத்திமமான சித்திகளைப் பெற்றவர்கள், நேர்முகப் பரீட்சை ஊடாகவும், பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டார்கள். என்னுடைய பல்கலைக்கழகப் பிரவேசத்தினால் பரவசமான அஸீஸ் அவர்கள், பாடசாலை மாணவர் ஒன்றுகூடலில் என்னைப் பாராட்டிப் பேசினார், புகழ்ந்தார்.

1959 இல் என்னுடைய பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட நான், என்னுடைய மரியாதையைச் செலுத்துவதற்கு அஸீஸ் அவர்களைச் சந்திக்கச் சென்றபோது, அவர் என்னைச் ஸாஹிராவில் ஆசிரியராக இணையுமாறு ஆலோசனை வழங்கினார். நான் சிவில் சேவைப் பரீட்சைக்குத் தோன்ற இருப்பதால், அதற்கு ஆயத்தப்படுத்த எனக்கு ஓய்வு தேவை என்றேன். என்னுடைய நோக்கம் நிறைவேறுவதற்குக் கற்பித்துக்கொண்டே கற்குமாறு ஆசி வழங்கினார். 1960 பங்குனி மாதத்தில் சிவில் சேவைப் பரீட்சையில் தேறிய எட்டுப் பேரில் நானும் ஒருவன் ஆனேன். தன்னுடைய கல்லூரி மாணவனின் சாதனையையிட்டு அஸீஸ் அவர்கள் அடைந்த அளவிலா ஆனந்தத்தை வார்த்தைகளால் வடிக்க முடியாது. ஒரு விசேட மாணவர் ஒன்றுகூடலை ஏற்பாடு செய்து, ஆசிரியர் குழாம் மற்றும் அனைத்து மாணவர்கள் மத்தியிலும் என்னை மனமாரப் பாராட்டிப் பேசினார். இவ்வாறான ஓர் அர்ப்பணிப்பு மிகுந்த அன்புச் சுடரை, அனைவரையும் மதிக்கும் அனைவராலும் மதிக்கப்படுகின்ற அறிவுப் பெருந்தகையைக் காண்பது அரிது.

அன்பு ஊற்றாகவும் இரக்க சுபாவமாகவுமான இந்த மாமனிதருடன் அறிமுகத்தைப் பெற்றுக் கொண்டதையும் அன்னாருடன் பழகியதையும் நான் பெரும் பாக்கியமாகவே பார்க்கின்றேன். .இச்சந்தர்ப்பத்தில், பார்புகழ் மெய்யியல் வித்தகரும், நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பேட்ரம் ரசல் அவர்களின் எழுத்துக்கூற்றுக்கள் என்னுடைய நினைவுக்கு வருகின்றன. ‘‘வாழ்க்கையில் அதிமுக்கிய பெறுமானங்கள் பணத்தால் அளவு செய்யப்படுவதில்லை. காணி பூமிகள், வீடுமனைகள்,

வங்கிவைப்புக்கள் அல்ல அப்பெறுமானங்கள் மாறாக அப்பெறுமானங்கள், அன்பு, நம்பிக்கை, இரக்க சுபாவம், நம்பகத்தன்மை ஆகியவை ஆகும்". செனேட்டர் அஸீஸ் அவர்கள் இலங்கையில் அனைத்துச் சமூகங்களுக்கிடையிலும் அன்பையும், பரஸ்பர நம்பிக்கையும் கட்டி எழுப்பிய தலைவராவார்..

அனேக மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்த புகழ்பூத்த யாழ் இந்துக் கல்லூரியிலிருந்து, கொழும்பு ஸாஹிராகக் கல்லூாயில் இணைந்தமை என்னுடைய வாழ்க்கையில் திருப்புமுனையாக .இருந்தது. நிகழ்ச்சிகள் நிறைவுற்ற வேகத்தையும், வாழ்க்கையையே மாற்றி அமைத்த தீர்மானத்தை எடுப்பதற்கு என்னையும் என்னுடைய அன்புத் தந்தையையும் ஈர்த்து இழுத்த அஸீஸ் அவர்களின் ஆதர்சன சக்தியை நான் இன்னும் ஆச்சரியத்துடன் நோக்குகின்றேன்.
நுண்ணறிவாற்றல் மிகு மனிதப் பெருந்தகைகளின் மானுட அணுகுமுறை மற்றும் நம்பகத்தன்மையே மக்களின் மனதில் என்றுமே அழியாத நினைவுத் தடயங்கள் எனச் சிந்தனையாளர் பேட்ரம் ரசல் அவர்களின் கூற்றைத் தவிர வேறு விடை எனக்குத் தோன்றவில்லை.

அன்னார் எம்மையும் இவ்வுலகத்தையும் விட்டுப் பிரியும் வரையிலும் நான் அவருடன் தொடர்ச்சியான தொடர்பில் இருந்தேன். ஆங்கிலம் மற்றும் தமிழ் இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த அளப்பரிய புலமையினால் நான் கவரப்பட்டேன். யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் சம்பிரதாயம், பழக்க வழக்கங்கள் பற்றி அவருடைய அருமந்த அறிவை நான் அதிகம் விரும்பினேன். அவருடைய தூய தமிழ் பேச்சும் எழுத்தும் தமிழ்ப் பேராசிரியர்களையே வியக்கச் செய்தன. கருத்துக்களைத் தூய தமிழில் மற்றும் ஆங்கிலத்தில் துல்லியமாக விளக்கும் ஆற்றல், கேட்போரைக் கவரும் காந்த சக்தியைக் கொண்டிருந்தார்.

ஸாஹிராவின் பழைய மாணவர்களான 'தினகரன்'பத்திரிகையின் பிரதம ஆசிரியரான காலஞ்சென்ற சிவகுருநாதன், மற்றும் தமிழ் உலகம் நன்கறிந்த காலஞ்சென்ற பேராசிரியர் சிவத்தம்பி மற்றும் நான், அஸீஸ் அவர்களின் கல்வி தொடர்பான அழைப்பின் பிரகாரம், அன்னாரின் இல்லத்திற்குச் சென்று, கல்வி தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வோம். அறிவுப் பரிமாற்றங்களில் சில அபிப்பிராய பேதங்கள் எழுந்தால்,அவற்றைச் சுமுகமாக ஏற்றுக்கொள்வோம். எம்முடைய உரையாடல்களின்போது, அவருடைய அன்பு வாழ்க்கைத் துணைவியாரும் அருமை மகளும் உபசரிக்கத் தவறியதில்லை. ரமழான் மாதத்தில் வழங்கப்பட்ட வட்டிலப்பத்தை இன்னும் மறக்கவில்லை. இஸ்லாமிய இலக்கியம் மற்றும் அரபுத்தமிழ், இஸ்லாமிய கலாச்சாரப் பண்பாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அன்னார் பாரிய பங்களிப்பை வழங்கி உள்ளார்.

இலங்கையில் முஸ்லீம்களைக் கல்வித்துறையில் மேம்படுத்தும் நோக்கத்துடன் பேரும் புகழும் அதிகாரமும் ஒருங்கிணையப்பெற்ற அரச சிவில் சேவையைத் தியாகம் செய்த, மனித மாணிக்கம் அஸீஸ் ஆவார். இத்தியாகம் போன்ற வேறு நிகழ்வு இலங்கை வரலாற்றில் நிகழவில்லை.
சிவில் சேவையில் இணைந்த முதலாவது முஸ்லீமான அவருக்கு அரச சேவையில் அதிசிறந்த எதிர்காலம் இருந்தது. ஆனால் தன்னுடைய சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்கும், கலாசார மறுமலர்ச்சிக்குமான அர்ப்பணிப்பு அவரிடம் மேலோங்கி இருந்தமையால், ஸாஹிராவின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அவருடைய இத்தீர்மானம், இலங்கையின் பல்கலாசார சமூகங்கள் போன்று முஸ்லீம் சமூகமும் உயரவேண்டுமென்ற உண்மையானதும் உத்தமமுமான அபிலாசையுடன் எடுக்கப்பட்டதால் அன்னார் முஸ்லீம் சமூகத்தின் தலைவராகவும் உயர்ந்தார்.

13 வருடங்கள் நீடித்த அவருடைய அதிபர்காலப் பகுதியில் கல்லூரி உயர்ந்த கல்வித்தரத்தை எட்டியது. பல்கலைக்கழகத்தில் மாணவர்களில் அனுமதியும் அதிகரித்தது. அனைத்து இனங்களையும் சேர்ந்த மாணவர்களின் தனித்தனிக் கல்வி தகைமைகளுக்கு அமைந்தவாறு அவர்களை ஒருங்கிணைத்து, அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் முயற்சிசெய்து ஸாஹிராவின் உயர்ச்சிக்கு அரும்பாடுபட்டாார். இதற்கு ஓர் உதாரணமாக நான் உள்ளேன்.

முஸ்லீம்களின் ஆரம்ப பாடசாலையான ஸாஹிராவை ஒரு முதன்மையான கல்லூரியாக முன்னிலைப்படுத்தும் தூய எண்ணத்துடன் உழைத்தார். அது மட்டுமல்ல,முஸ்லீம் மக்களின் சமயம், கலாச்சாரம் உள்ளடங்கிய பல்கலைக்கழகமாக ஸாஹிராவை உயர்த்தவேண்டுமென்றும் உழைத்தார். ஆனால் இந்த எதிர்பார்ப்பு, எந்த ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாக இருக்கின்ற ஜயப்பாடு மற்றும் போட்டி மனப்பான்மை காரணமாக இந்த உன்னத நோக்கம் நிறைவுபெறவில்லை.

முஸ்லீம் சமூகத்தின்இன்னொரு தலைவராக இருந்த சேர் ராசிக் பரீத் அவர்கள்,அஸீஸ் அவர்களை இவ்வாறு புகழ்ந்துள்ளார். "வேறு எந்த ஒரு நபரைவிடவும் அதிக சேவையை அஸீஸ் அவர்கள் வழங்கி உள்ளார் என்பதை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் தன்னுடைய சிவில் சேவைப் பதவியை முஸ்லீம் சமூகத்திற்கும் ஸாஹிராவிற்கும் அர்ப்பணித்த பெரும்தகை ஆவார்.".

கலாநிதி ரி..பி. ஜயா அவர்களின் வெற்றிகரமாக அமைந்த அதிபர் காலத்தைத் தொடர்ந்து, ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியைக் கையேற்ற செனேட்டர் அஸீஸ் அவர்கள், இந்தக் கல்லூரியைக் கல்வியில் மட்டுமல்லாமல் சமூகக் கலாசார நடவடிக்கைகள் மற்றும் துப்பாக்கி வேட்டு வைத்தல் உள்ளிட்ட விளையாட்டுக்களிலும் முதன்மையாகத் திகழவேண்டும் என்ற ஆர்வத்துடன் பிரமாண்டமான செயல்முறைகளில் ஈடுபட்டார். அவர் வருந்தி உழைத்து வளர்த்த கல்லூரி நூலகத்தின் முக்கியத்துவத்தை என்னுடைய பல்கலைக்கழகப் புகும் பரீட்சை மற்றும் அதன் பின்பு, சிவில் சேவைப் பரீட்சை ஆகியவற்றிற்கு ஆயத்தப்படுத்துகையில் உணர்ந்தேன். அவர் அதிபராக ஓர் அர்ப்பணிப்பு நிறைந்த குழாத்தை அமைத்துக்கொண்டு, சுமார் 150 மாணவர்களை அப்போது இலங்கையில் ஒரேயொரு பல்கலைக்கழகமான பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற வசதி அமைத்தார். இந்தச் சாதனையைப் படைத்த அதிபர் அஸீஸ் அவர்களின் காலப் பகுதி ஸாஹிராவில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது.

செனேட்டர் அஸீஸ் அவர்கள்,முஸ்லீம்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல உத்திகளைக் கையாண்டார். முஸ்லீம் மாணவர்களுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக்கொடுக்க உதவும் நோக்குடன் இலங்கை முஸ்லீம் கல்விச் சகாய நிதியத்தை உருவாக்கினார். முஸ்லீம் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட இந்நிதியம் போற்றத்தகு வளர்ச்சி பெற்றுள்ளதுடன் அருமையான முஸ்லீம் மாணவர்கள் பயன்பெற்றும், பெற்றுக்கொண்டும் உள்ளார்கள். அன்னார் தொடக்கிவைத்த முஸ்லீம் இயக்கங்கள் இலங்கை முழுவதிலும் இயங்கி வருகின்றன.

செனேட்டர்அஸீஸ் அவர்களின் சேவைகள் நாட்டில் நன்றாக அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் முதலாவது பிரதமர் அதிமேதகு டி.எஸ். சேனாநாயக்க அவர்கள், இலங்கையில் யுத்தகாலத்தின் பின்பு நிலவிய உணவுத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உணவு உற்பத்தித் திட்டங்களை உருவாக்கி, அவற்றை வெற்றியடையச் செய்வதற்கு அஸீஸ் அவர்களையும் தேர்ந்தெடுத்தார். செனேட் சபைக்கு நியமிக்கப்பட்ட அஸீஸ் அவர்கள் மூன்று தடவைகள் அப்பதவியை வகித்துள்ளார். அரச சேவைகள் ஆணைக்குழுவிலும் சேவை ஆற்றி உள்ளார்.

எவ்வித இனபேதமும் கலாசார வேறுபாடுமில்லாத ஒரு தமிழனான, நான் அஸீஸ் அவர்களை அனைத்து சமூகங்களுக்குமான ஒரு விவேகமான இராஜதந்திரி ஆகவும் ஒரு புலமை மிகு கல்வி வித்தகனாகவும் திகழ்ந்தார் எனக் குறிப்பிட்டுக்கொள்வதில்பெருமைஅடைகிறென்

ஒரு முன்னோடிக் கல்விமானாக அவர் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்தணைத்து ஊக்குவித்தார். திருக்குறள், திருவாசகம், கம்பராமாயணம், புறநானூறு மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய தமிழ்ப் பெரும் காப்பியங்களை கௌரவித்துப் பாரறியச் செய்ய பல பல கூட்ட அமர்வுகள் ஏற்பாடு செய்துள்ளார். செனேட்டர் அஸீஸ் மனிதர்களில் ஒரு மாணிக்கம். எனக்கு வழிகாட்டியாகவும் நம்பத்தகு நண்பனாகவும் விளங்கிய பெருந்தகைக்கு என்னுடைய சமர்ப்பணம் இது.

(சி.நாராயணசுவாமி ஸாஹிராவில் அஸீஸ் யுகத்தில் மாணவனாகவும் ஆசிரியராகவும் இருந்தார். அதன் பின் ஸாஹிராவில் இருந்து பல்கலைக்கழகம் சென்று 1959ல் பட்டதாரியானார். பின்பு சிவில்சேவை அதிகாரியாகவும் அதன் பின் க்கிய நாடுகள் மற்றும்ஆசிய அபிவிருத்த வங்கியில் கடமையாற்றி அதன் பின் பணிப்பாளராக 1996 இல் ஓய்வு பெற்றார்.)

தமிழாக்கம்:
எஸ்.எம். எம். யூசுப்

ஐ